1991 செப்டம்பர் 11] [பேரவைத்தலைவர்]

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று பேரவை மீண்டும் 13-9-1991, வெள்ளிக்கிழமை காலை 9.30, மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை, பிற்பகல் 1.46 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

6. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

52. பம்பாய், திருவாளர்கள், டைமன்ட் அண்டு ஜெம் டெவலப்மென்ட் கார்ப்பரேஷனால் கொள்முதல் செய்யப்பட்ட இயற்கையான விலை உயர்ந்த கற்கள் (பட்டை தீட்டப்படாத கற்கள்) மற்றும் விற்பனை செய்யப்பட்ட இயந்திர கருவிகளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக் கட்டளைகள் துறையின் 1991 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 7 ஆம் நாளிட்ட 131 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

53. கோவை, திருவாளர்கள் இராமகிருஷ்ணா வித்யாலயா மற்றும் அதனைச் சார்ந்த பதினொன்று நிறுவனங்களால் கொள்முதல் செய்யப்பட்ட சில பொருள்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக் கட்டளைகள் துறையின் 1991 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 18 ஆம் நாளிட்ட 154 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1959 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

54. ரத்தினகிரி, ரத்தினகிரி புற நகர் மருத்துவ மனைக்கு விற்பனை செய்யப்படும் மருந்துப் பொருட்கள் அறுவை சாதன கருவிகள் மற்றும் இதரப் பொருட்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக் கட்டளைகள் துறையின் 1991 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 22 ஆம் நாளிட்ட 165 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

55. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகளின் விற்பனைக்கு அளிக்கப்பட்ட விற்பனை வரிச் சலுகையினை 1991 ஏப்ரல் 1 ஆம் நாள் முதல் 1992 மார்ச்சு திங்கள் 31 ஆம் நாள் வரை நீட்டிப்பது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய

பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்

1991 செப்டம்பர் 11]

அறக் கட்டளைகள் துறையின் வெளியிடப்பட்ட 1991 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 2 ஆம் நாளிட்ட 188 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

56. பாண்டிச்சேரி, இந்தியன் காபி ஒர்க்ஸ் கூட்டுறவு சங்கத்தினால் தமிழகத்தில் விற்கப்படும் உணவு மற்றும் பானங்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து 1990 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 21 ஆம் நாளிட்ட 669 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1956) 53 பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

57. அன்னை சத்யா போக்குவரத்துக் கழகத்தின் 1989-90 ஆம் ஆண்டிற்கான மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்.)

58. தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் 1989-90 ஆம் ஆண்டிற்கான பதினைந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்.)

59. பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் 1989 -90 ஆம் ஆண்டிற்கான பத்தொன்பதாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்களின் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்.)

60. இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 31—3—1989 ஆம் ஆண்டு முடியவுள்ள காலவரைக்கான அறிக்கை எண். 3 (வணிகம்) [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] (ஆங்கிலம்)

61. இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 31—3—1990 ஆம் ஆண்டு முடியவுள்ள காலவரைக்கான அறிக்கை எண். 1 (வணிகம்) [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (ஆங்கிலம்)

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

—ஏதுமில்லை—